**தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்கள்த்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) நிதி நிலமைக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கண்டி பௌத்த அலுவல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணப் பணிகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 4,500,000 மற்றும் ரூபா 8,000,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த செலவினம் நடைமுறை வேலையாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை வேலை நிதி நிலமைக்கூற்றில் நிதியல்லாத சொத்தாக காண்பிக்கப்பட வேண்டியமை. | நிர்மாணங்கள் 2019 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்டுள்ளமையால் நிலையான சொத்தாக கணக்கு வைப்பதற்கு நடவடிககை எடுப்பதுடன், நடைமுறை வேலையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களில் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக மீதியானது ரூபா 64,325,314 ஆன போதிலும், நிதி | நிதிக்கூற்றுக்களின் ஒப்பீட்டு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஒப்பீட்டு எண்ணிக்கைகளை சரியாக வெளிப்படுத்த | ஆதனங்கள், பொறிகளின் 2017 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு எண்ணிக்கை ரூபா 64,325,314 ஆக வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலைமைக் கூற்றில் 2017 ஆம் ஆண்டின் அதனோடு ஒத்த அறிக்கைகளில் எண்ணிக்கைகளை காண்பிக்கும் போது அது ரூபா 12,650,267 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டியமை. | |

**1.6.2 வைப்புக்கள்**

------------------

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| விகாரைகளின் பொறுப்பாளர்களால் திணைக்களத்தில் வைக்கப்படும் பிணைப் பணங்களை கொண்டமைந்த ரூபா 6,832,155 ஆன மீதியான நடைமுறைக் கணக்கொன்று 2017 திசெம்பர் 29 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அவற்றல் ரூபா 477,250 தொகைக்கான குறித்த பிணையாளர்கள் மாத்திரம் மீளாய்வான்டின் போது இனங்காணப்பட்டிருந்த போதிலும், ரூபா 6,354,905 இற்காக பிணையாளர்கள் இனங்காணப்படாது அவர்களின் பெயர்களில் வைப்புச் செய்யப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பிணையாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் பெயர்களில் வைப்புச் செய்யப்பட வேண்டியமை. | வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்குள்ள ரூபா 6,354,905 தொகையான பணம் உரிய பொறுப்பாளர்கள் இனங்காணப்பட்டு தீர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதியானது 2018 சனவரி 01 ஆந் திகதயில் உள்ளபடியாக ரூபா 57,477,285 மற்றும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 57,045,008 ஆக காணப்பட்ட போதிலும், நிதி நிலமை தொடர்பான கூற்றில் அதுெ முறையே ரூபா 56,475,007 மற்றும் ரூபா 55,325,894 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | நிதி நிலமைக்கூற்றினை தயாரிக்கும் போது குறுக்கு பதிவுகள் மூலம் கணக்கு வைக்கப்படும் பெறுமதி தாமத வழுவொன்றின் காரணமாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் 11 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மற்றும் 4 மூலதன செலவின் விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 131,579,634 தொகை அல்லது 6 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சிற்குரிய நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தது. | தேவைப்பாடு உரிய முறையில் எதிர்வு கூறப்பட்டு நிதியங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டியமை. | எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்படாமை, கட்டளையிடப்பட்ட பொருட்கள் கிடைக்காமை, மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை போன்ற காரணங்களின் காரணங்கள் இந்த சேமிப்பிற்கு தாக்கமளித்திருந்தது. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 94(I) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிதியேற்பாட்டு | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| இற்கு முரணாக ஆசிரியர் படிகள் செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் எஞ்சிய ரூபா 18,156,509 தொகையை விஞ்சி ரூபா 3,221,491 இனால் அதிகரித்து பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | எல்லையினுள் செலவினங்கள் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டியமை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.3 முற்பணங்களை வெளியிடல் மற்றும் தீர்த்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) 20 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 347,500 தொகையான முற்பணங்களுக்குரிய எஞ்சிய தொகையினை தீர்ப்பனவு செய்யும் போது 4 நாட்கள் முதல் 28 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தது. | முற்பணங்களை வழங்கும் போது மற்றும் தீர்ப்பனவு செய்யும் பணிகள் முறையான மேற்பார்வைக்கு உட்படுத்த வேண்டியமை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை திருத்துவதற்காக மீண்டும் எழுத்துமூல அறிவுரைகளை வழங்குகின்றேன். |
| (ஆ) தேவைப்பாடு தொடர்பில் உரிய முறையில் ஆராயாது முற்பணங்கள் வழங்கப்பட்டமையின் காரணத்தால் வழங்கப்பட்ட முற்பணங்களில் ரூபா 141,195 அதாவது 23 சதவீதம் முதல் 55 சதவீதம் செலவிடப்படாது மீள தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேவைப்பாடு தொடர்பில் உரிய முறையில் ஆராய்ந்து முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியமை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை திருத்துவதற்காக மீண்டும் எழுத்துமூல அறிவுரைகளை வழங்குகின்றேன். |

**3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் | இலக்குகள், அந்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய அடைவுகளும், இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணுவதற்காக |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டியமை. | திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் பங்குபற்றலுடன் இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அந்த செயலமர்வுகளில் முன்மொழியப்பட்டுள்ள குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. |